

# S.Dakshinamoorthy - A Karma Yogi

"Can you guess the most popular spectator sport last summer, at the London Olympics? - volleyball" says coach Dakshinamoorthy. He is amused at my surprise. "Every game was a sell-out and even in the TV viewership, volleyball had the highest rating. See, volleyball is a sport involving speed, power and reflex. There is a high level of specialization and co-ordination which makes the game very fast paced. It is the ultimate team sport", says Coach Dakshina turning around to look at his team with pride. The men in orange finish their warm-up routine. One of them hoses down the hot and dusty clay court in preparation for the evening's game. An earthy fragrance fills the atmosphere. "And did you know, that FIVB (Federation Internationale de Volley-ball) has 220 members - more than FIFA (football) and FIBA (basketball)?" adds Coach Dakshina for our benefit.

Coach Dakshinamoorthy's romance with the game began when he was in school. At the prime of his game, he represented Madras University at the All India Inter-University Volleyball tournament in the 1980s. Then he moved on to coaching with a course from NIS, Bangalore. As a coach with the Sports Authority of India (SAI), he travelled the State, spotting prospective players and brought them under his wing, grooming them to excellence. In his nearly 30 years of service to the sport, Coach Dakshinamoorthy has trained at least a thousand players. All of them have played for Universities and the state of Tamil Nadu at various levels of expertise or age groups, before being recruited by the most reputed teams in the country, like ICF, IOB, ONGC and the Railways. Volleyball greats like S. Sivarajan, R. Kamaraj and M. Ukkirapandian started with Coach Dakshina. He has been by far the most consistent in producing players of international repute- "around 35 of my players have played in the Indian Squad", he says modestly.

Coming from a rural background his route as a player had been filled with numerous obstacles and heart breaks - financial constraints, poor facilities and equipment, and no qualified coaches- "our seniors used to train us". But with an increase in Indian participation in International Sporting Events, he realized that sport certainly promised a future for its players. While his peers moved onto national teams and other careers, S. Dakshinamoorthy decided to stay on the sidelines and qualify as a volleyball coach. He joined the Sports Authority of India which is a Central Body that deputes coaches to the States. Through this he got assigned to Sports Development Authority of Tamil Nadu (SDAT). "In 1995, the State Govt. started a scheme called the Hostel of Excellence. That was the start of a golden period for sports (especially volleyball) in Tamil Nadu. With excellent funds, boarding and training facilities, kit sponsorship and travel allowances, players felt a great joy in planning their games and winning for their country. They won plenty of individual awards too."

Volleyball he observed was more popular among rural youth, and they needed someone ""who-had-been-there" to guide and channelize their strength to propel them ahead. He recollects that, establishing the first team was very difficult. He had to do the ground work himself-talk to the parents of his prospective students and convince them of the opportunities in sport. The rural youth who were not used to disciplining actions, tough fitness programs and daily training schedules had to be molded into shape; they could not see the point of it all and required constant motivation. But gradually, with victory came offers from Public Sector teams and reputed clubs and established players with offers from Banks and the Indian Railways became the torch bearers for future players. A well known sports journalist with Deccan Chronicle has this to say, "Coach Dakshina and his players are sought after by all national clubs and teams. He is a tough man to please. He is very strict in terms of selection. And he is only the second Indian to clear the Level-III certification for International Coaches. It's no wonder that he commands such respect from the players. And it's not just flattery when parents of these players say that it is only because of Coach Dakshina that they have sent their sons to pursue volleyball as a career. They know that their sons are in safe hands and that if they continue to play well, their future will also be secured with a job in the Public Sector. He is a father-figure to them. For Coach Dakshina though, this reputation is the result of some very tough decisions. I know for a fact that his team here and volleyball are of greater concern to him than even his family. He recently faced a lot of flak from higher-ups too,

Volleyball greats like S. Sivarajan, R. Kamaraj and M. Ukkirapandian started with Coach Dakshina. He has been by far the most consistent in producing players of international repute- "around 35 of my players have played in the Indian Squad", he says modestly

but that has not deterred him.
He is nothing short of a karma yogi!"

For his part, Coach Dakshina says, "I too have learned a lot from my boys - to confide in them completely. Leadership and responsibility are part of the training, so I keep them focused by involving them in all aspects of the training. Pre preparation, accounts, travel plans, planning daily schedules etc are all entrusted to the boys. When freshers come, we involve them in laying the hostel rules. They see that there are no unreasonable demands being made on them- they set the rules and they follow them. In the long run this is what keeps them out of trouble and there are no chances of complaints going to the parents - self discipline is very important in sport. So you see, the trust is mutual."

Colleges and Universities that have worked with Coach Dakshina too hold him in very high esteem. The record that he has set in terms of performance and laurels for the institution is unprecedented. His undemanding nature and commitment have ensured a good rapport with college authorities, who accede to every request he makes. The International standard hostel and training facilities provided by the colleges are proof of their commitment to support Coach Dakshina. In fact the institutions help the players with their academics. Their peers in college and the professors have great regard for the boys; they are aware of the backgrounds that these boys come from and the amount of hard work they put in, for the sport. They too help with academic support. Some of the players have graduated and are pursuing their Masters Degree.
"My team and I faced some trouble last year. By way of showing their solidarity, my old boys started a Hostel of Excellence Alumni- it was such an emotional moment to see them all come back and express their support. They have promised to help in every way. In fact, when one of our star players was injured six months ago, one of my old students financed the entire treatment, no questions asked. It was very touching. To see these boys move up in life gives me the greatest sense of accomplishment."

Curious to know more about the three short boys in this line up of six-footers, I ask to speak to one of them.
"Every night! Every night, when I go to bed, I dream that next morning, I will be tall enough to be a spiker, but in the morning, I wake up to the reality of how much my team needs me in my position of a Libero, and then it does not matter that I am shorter than the others", he states with a winning smile, standing amongst his 6" plus compatriots.
Short but dynamite-like in his stance, his words had a lasting impression on us- at our brief encounter with Volleyball Coach S Dakshinamoorthy and his Team at SRM University. That is the level of discipline and confidence that he has instilled in "his boys"!! The Hostel of Excellence team that now resides at SRM University has been on the top for the last five years in the Inter-University Volleyball Championships, but for one year when they dropped to the second place. They have learned from their coach, to take victories and defeats with equanimity. They know that they just need to keep fit and play their best; their mentor will take care of the rest!





கடந்த லண்டன் ஒலிம்பிக்ஸில் மிகவும் பிரபலமாக விளங்கிய விளையாட்டு எது என்று தெரியுமா - வாலிபால்!" என்றார் பயிற்சியாளர் தக்ஷிணாமூர்த்தி.

எனது வியப்பைப் பார்த்து அவர் முகத்தில் புன்னகை. "ஒவ்வொரு ஆட்டத்தின் பொழுதும் அரங்கு நிரம்பி வழிந்தது. தொலைக்காட்சியிலும் இந்த விளையாட்டே அதிகபட்சமாகப் பார்க்கப்பட்டது.வேகம், சக்தி, அனிச்சைச்செயல்-இவை மூன்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டு வாலிபால். உயர்ந்த நிபுணத்துவமும், நல்ல ஒருங்கிணைவும் நிறம்பப்பெற்றதால், இந்த ஆட்டம் மிகவும் வேகமாக நகரக்கூடிய ஒரு ஆட்டமாகும். வாலிபால் மிகச்சிறந்த கடைமுடிவான குழு ஆட்டம்". பெருமிதத்துடன் தனது குழுவை நோக்கிய வண்ணம் பயிற்சியாளர் தக்ஷிணா இவ்வாறு கூறினார்.

ஆரஞ்சு வண்ணம் அணிந்த வீரர்கள் பயிற்சியை முடிக்கின்றனர். ஒரு வீரர், சூடான களிமண்ணால் ஆன மைதானத்தில் அங்கும் இங்கும் மெதுவாக ஓடுகிறார். மாலையில் நடக்க இருக்கும் ஆட்டத்திற்கான பயிற்சி போலும்; ஒருவிதமான மண்வாசனை அங்கு கமழ்கிறது.

'உங்களுக்குத் தெரியுமா?, 'எஃப்.ஐ.வி.பி' (FIVB) எனப்படும் அகில உலக வாலிபால் கூட்டமைப்பு, 220 உறுப்பினர்களைக் கொண்டது. இது, 'அகில உலக கால்பந்து கூட்டமைப்பு' (FIFA) மற்றும் அகில உலக கூடைப்பந்து கூட்டமைப்பு (FIBA) ஆகிய அமைப்புகளில் உள்ள உறுப்பினர் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாகும், என்று மேலும் நம்மிடம் கூறுகிறார் பயிற்சியாளர் தக்ஷிணா.

வாலிபாலுடனான காதல், தக்ஷிணாமூர்த்திக்குப் பள்ளிப் பருவத்திலேயே தொடங்கி விட்டது. 80களில், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டியில், இவர் மதராஸ் பல்கலைக்கழகத்துக்காக ஆடினார். பிறகு, பெங்களூரில் அமைந்துள்ள 'தேசிய விளையாட்டு நிறுவனத்தில்' (NIS) முறைப்படி பயின்று பயிற்சியாளராக ஆனார். 'இந்திய விளையாட்டு ஆணைக்குழு' வின் (Sports Authority Of India) பயிற்சியாளர் என்ற முறையில் மாநிலம் முழுவதும் சுற்றி, நல்ல திறமையான வீரர்களை அடையாளம் கண்டு

கொண்டு, அவர்களைத் தனது நேரடி மேற்பார்வையில் கொண்டு வந்து. சிறந்த வீரர்களாக அவர்கள் பரிமளிக்கும்படி செய்தார்.

தனது 30 வருட சேவையில். குறைந்தது ஓராயிரம் வீரர்களுக்கு இவர் பயிற்சி அளித்திருக்கிறார். அவர்கள் அனைவரும் பல்கலைக்கழகத்துக்காகவும். மாநிலத்திற்காகவும் விளையாடி. ஐ.சி.எஃப், ஐ.ஓ.பி. ஓ.என்.ஜி.சி., ரயில்வேஸ், முதலிய நிறுவனங்களால் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு. பிறகு இந்த குழுக்களுக்காகவும் ஆடியுள்ளனர். சிறந்த வாலிபால் வீரர்களான எஸ்.சிவராஜன், ஆர்.காமராஜ் மற்றும் எம்.உக்கிரபாண்டியன், தங்களது முதல் பயிற்சியை தகஷிணாவிடம் தான் ஆரம்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 'என்னால் பயிற்சியளிக்கப்பட்ட சுமார் 35 வீரர்கள், இந்திய அணியில் இடம் பெற்றிருக்கிறார்கள்'. என்று தன்னடக்கத்துடன் கூறும் பயிற்சியாளர் தகஷிணா. உலகத்தரம் மிக்க வீரர்களைத் தொடர்ந்து தருவதில் முன்னணியில் இருக்கிறார்.

கிராமப்புறத்திலிருந்து வந்ததால், அவர் பட்ட கஷ்டங்கள் நிறைய. விளையாட்டு வீரராக இவர் நடந்து வந்த பாதையில் ஏகப்பட்ட தடைக்கற்கள்-போதிய பணம் இல்லாமை, பயிற்சி செய்த இடங்களில் வசதிக்குறைவு, முறைப்படி பயிற்சி அடைந்த பயிற்சியாளர்கள் இல்லாமை ('பல வேளைகளில் குழுவில் இருக்கும் மூத்த வீரர்களே பயிற்சி அளித்தார்கள்'). எனினும். உலகளவில் நடக்கும் போட்டிகளில் இந்திய வீரர்கள் நிறைய அளவு பங்கேற்க ஆரம்பித்ததும் இந்நிலை மாறியது; இந்த விளையாட்டு கண்டிப்பாக நல்ல ஒரு எதிர்காலத்தைத் தரும் என்ற நம்பிக்கை துளிர் விட ஆரம்பித்தது.

நண்பர்கள் பலர் தேசியக் குழுவில் ஆட ஆரம்பித்த பொழுதிலும், தகஷிணா பயிற்சியாளராக ஆக விரும்பி. அதற்கான தகுதி பெற முடிவு செய்தார். பயிற்சியாளர்களை மாநிலங்களுக்கு அனுப்பும் மைய அமைப்பான 'இந்திய விளையாட்டு ஆணைக்குழு' வில் (SAI) சேர்ந்து, அதன் மூலம் 'தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி ஆணைக்குழு'விற்கு (Sports Development Authority of Tamil Nadu) அனுப்பப்பட்டார்.

''1995 ஆம் ஆண்டு, மாநில அரசு, 'மேம்பாடு மிக்க விடுதி' (Hostel of Excellence) என்னும் திட்டத்தை ஆரம்பித்தது. விளையாட்டிற்கு-குறிப்பாக வாலிபால்-இது ஒரு பொற்காலத்தின் தொடக்கம் எனலாம். நல்ல வருமானம், தங்கு வசதி, முறையாகப் பயிற்சி செய்ய வசதி. நல்ல டயணப்படி. ஆடை மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கு நல்கை-இவை அனைத்தும் இருந்ததால். வீரர்கள் வெற்றிபெற செயல்திட்டம் தீட்டுவதிலும்,வெற்றி பெருவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். தனிப்பட்ட முறையிலும் பல விருதுகளும், பரிசுகளும் அவர்கள் வாங்கினார்கள்.'

வாலிபால், கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக இருந்தாலும், தங்களது பலத்தை நல்வழிப்படுத்தி, ஒருமுகப்படுத்தி அழைத்துச் செல்வதற்கு 'அங்கு ஏற்கெனவே இருந்த' ஒருவரின் வழிகாட்டுதல் கண்டிப்பாக அவர்களுக்குத் தேவைப்பட்டது. முதன்முதலாக ஒரு முழுமையான குழுவை நிலைநிறுத்துவதில். தான் பட்ட கஷ்டங்களை நினைவு கூர்ந்தார் தகஷிணா. வாலிபால் விளையாட்டில் உள்ள வளமான வாய்ப்புகள் மற்றும் ஒளிமயமான எதிர்காலம் பற்றி, திறன் மிகுந்த வீரர்களின் பெற்றோருடன் பேசி அவர்கள் ஒப்புமையை வாங்கியது முதல் ஒழுங்குமுறை பற்றி அதிகமாக அறியாத கிராமப்புற இளைஞர்களை, கடினமான உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் பயிற்சி அளித்து அவர்களை அழகாக செதுக்கியது வரை. எல்லாவிதமான வேலைகளையும் அவரே செய்தார். முதலில் இதன் குறிப்பு நுட்பம் அவர்களுக்குப் புரியாமல் இருந்ததால், நிறைய உந்துகையும் தன்முனைப்பாற்றலும் தேவைப்பட்டது. எனினும், போகப்போக வெற்றிமகளுடன், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கி, ரயில்வேஸ் போன்ற அமைப்புகளிருந்து வேலை வாய்ப்புகளும் குவிய, தம்மை இந்த வீரர்கள் வருங்கால வீரர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினர்.

'டெக்கன் க்ரானிகல்' செய்தித்தாளின் இதழாளர் பயிற்சியாளர் தகஷிணாவைப் பற்றிப் பேசும்பொழுது இவ்வாறு கூறுகிறார்:

''பல குழுக்கள் இவர்களை நாடிச் செல்லும் அளவுக்குத் திறமை வாய்ந்தவர்கள் பயிற்சியாளர் தகஷிணாவும் அவரால் பயிற்சியளிக்கப்பட்ட வீரர்களும். அவரை மிக எளிதாக திருப்திப்படுத்த முடியாது. வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் விதத்தில் மிகவும் கண்டிப்பானவர். உலகப் பயிற்சியாளர்களுக்கான சான்றளிப்பில் மூன்றாவது நிலை வரை சென்றுள்ள இரண்டாவது இந்தியர் அவர். வீரர்கள் மத்தியில் இவ்வளவு மதிப்புடன் அவர் இருப்பதில் எந்த விதமான வியப்பும் இல்லை. பயிற்சியாளர் தகஷிணா இருப்பதனால்தான் தங்கள் மகன்களை வாலிபால் விளையாடவும், அதையே வாழ்க்கைத் தொழிலாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கவும் செய்தோம் என்று வீரர்களின் பெற்றோர்கள் கூறுவது வெறும் வாய்ப்புகழ்ச்சி இல்லை. முற்றிலும் உண்மை.தங்கள் மகன்கள் பாதுகாப்பான கைகளில் இருப்பதும், அவர்கள் நன்றாக விளையாடிப் பரிமளித்தால், பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து வரும் வேலை வாய்ப்பு மூலமாக அவர்களது எதிர்காலம் சிறப்புற அமையும் என்றும் அவர்களுக்குத் தெரியும். வீரர்களுக்குத் தந்தையைப் போன்றவர் அவர். எனினும், இந்த பேரும் புகழும் நன்மதிப்பும், பல கடினமான முடிவுகளாலேயே கிடைக்கப்பெற்றிருக்கின்றன. வாலிபால் விளையாட்டின் மீதும். தனது குழுவின்மீதும்தான் தனது குடும்பத்தைவிட அவருக்கு அக்கறை அதிகம். மேலிடத்திலிருந்து பல இன்னல்களை அவர் அனுபவித்திருக்கிறார். என்றாலும், இவை எதுவும் அவரை அசைக்க முடியவில்லை. அவரை ஒரு கர்ம யோகி என்றே கூறலாம்''.

தமது பங்கிற்கு பயிற்சியாளர் தகஷிணா. ''இந்தப் பிள்ளைகளிடமிருந்து நானும் நிறைய கற்றுக் கொண்டிருக்கிறேன். அவர்களை முழுவதுமாக நம்புகிறேன். முகாமைத்துவமும், பொறுப்புணர்ச்சியும் பயிற்சியின் ஒரு பகுதியாதலால், அவர்களை ஒருமுகப்படுத்தும் முகமாக, பந்தய முன்னேற்பாடு, கணக்கு வழக்கு, தின அட்டவணை, பயணத்திட்டம் போன்றவைகளை அவர்களிடம் ஒப்படைக்கிறேன். புதியவர்கள் வருகையின் பொழுது. விடுதி விதிமுறைகளை அவர்களையே வகுக்கச் செய்கிறேன். அவர்களும் அதனையே பின்பற்றுகிறார்கள். அவர்கள் ஒழுங்காக இருப்பதற்கு இதுவே உதவுகிறது. ஒழுக்கம் விளையாட்டிற்கு இன்றியமையாதது அல்லவா? மேலும். இவ்வாறு செய்வதால் நம்பிக்கை இரண்டு பக்கங்களிலும் வளர்கிறது, என்கிறார்.

பயிற்சியாளர் தகஷிணாவுடன் பணி புரிந்த பள்ளிகளும், கல்லூரிகளும் அவர்மீது பெருமதிப்பு வைத்திருக்கின்றன. இவரது செயலாக்கத்தினாலும், செயல் நிறைவேற்றத்தினாலும். இந்தக் கல்வி நிலையங்கள் அடைந்த புகழ் இதுவரை காணாதது.

நிபந்தனையற்ற செயல்பாட்டுமுறை, மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய பண்புகளால் கல்லூரிகளுக்கும் இவருக்கும் நல்லதொரு மனத்தொடர்பு இருக்கிறது. அதனால். விளையாட்டு தொடர்பாக இவர் என்ன கோரிக்கை வைத்தாலும்

சிறந்த வாலிபால் வீரர்களான எஸ்.சிவராஜன், ஆர்.காமராஜ் மற்றும் எம்.உக்கிரபாண்டியன், தங்களது முதல் பயிற்சியை தகஷிணாவிடம் தான் ஆரம்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 'என்னால் பயிற்சியளிக்கப்பட்ட சுமார் 35 வீரர்கள், இந்திய அணியில் இடம் பெற்றிருக்கிறார்கள்', என்று தன்னடக்கத்துடன் கூறும் பயிற்சியாளர் தகஷிணா

அதனை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள். உலகத் தராதரத்திற்கு நிகரான விடுதிகளும், பயிற்சி வசதிகளும் கல்லூரிகளில் இருப்பதே இதற்குச் சான்று. கல்லூரிகளும், அங்கு உள்ள மாணாக்கர்களும் பேராசிரியர்களும் வீரர்களின் பின்னணி மற்றும் அவர்களின் கடின உழைப்பு இவற்றை நன்கு அறிந்து, அவர்களின் படிப்பிற்கு உதவுகிறார்கள்.சில வீரர்கள் பட்டப்படிப்பை முடித்துவிட்டு, முதுகலைப் படிப்பும் படிக்கிறார்கள்.

''சென்ற வருடம், நானும் எனது குழுவும் ஒருவிதமான கஷ்ட நிலையில் இருந்தோம். எனது முன்னாள் மாணவர்கள், எனக்குக் கூட்டொருமை காட்டும் முகமாக, 'முன்னாள் மாணாக்க மேம்பாடு மிக்க விடுதி' நிறுவினார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து எனக்கு ஆதரவளித்தது உணர்ச்சிபூர்வமான ஒரு நிகழ்வாகும். எந்த விதத்திலும் உதவி செய்ய அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்.ஆறு மாதங்களுக்கு முன்பு எனது குழுவில் இருக்கும் ஒரு நட்சத்திர வீரனுக்குக் காயம் பட்டபொழுது, மனதைத் தொடும் விதமாக, எனது முன்னாள் மாணாக்கன் சிகிச்சையின் முழு செலவையும் ஏற்றுக் கொண்டான். இவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதைப் பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் சாதித்த உணர்வு ஏற்படுகிறது.

உயரத்தில் சற்று குள்ளமாக இருக்கும் மூன்று வீரர்களை அங்கும் பார்க்கும்பொழுது, அவர்களுடன் பேசும் அவா எனக்குள் எழுகிறது. ஒருவனிடம் பேசுகிறேன்.

'ஒவ்வொரு இரவு! ஒவ்வொரு இரவும் நான் உறங்கச் செல்லும்பொழுது, அடுத்த நாள் 'ஸ்பைகராக' (spiker) இருக்கும்படி நான் உயர்ந்து விடுவதாக கனா காணுகிறேன் ஆனால், காலையில் எழுந்தவுடன் தான் 'லிபரோ'வாக (libero) நான் இருப்பது. எனது குழுவிற்கு எவ்வளவு தேவை என்கின்ற உண்மை புரிகிறது. அப்பொழுது எனக்கு எனது உயரம் ஒரு பொருட்டில்லாமல் ஆகி விடுகிறது. என்று ஆறடி வீரர்களுக்கிடையே நின்று கொண்டு, வெற்றிச் சிரிப்புடன் அவன் கூறுகிறான். குள்ளமாக இருந்தாலும். சுரங்க வெடியைப் போல நின்ற அந்த வீரனின் சொற்கள், என்றென்றும் நிலைத்திருக்கும் எண்ணத்தை. அடையாளத்தை. எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் நாங்கள் சிறிது நேரமே சந்தித்த பயிற்சியாளர் தக்ஷிணா மீதும் அவரது வாலிபால் குழு மீதும் ஏற்படுத்திவிடுகிறது. அந்த அளவிற்கு அவர் மாணாக்கர்களுக்குள்ளே ஒழுக்கத்தையும். நம்பிக்கையையும் விதைத்திருக்கிறார்.

எஸ்.ஆர்.எம். பலகலைக்கழகத்தில் அமைந்துள்ள 'மேம்பாடு மிக்க விடுதி', பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான வாலிபால் போட்டிகளில், சென்ற ஐந்து வருடங்களில் நான்கு முறை முதலிடத்தைப் பிடித்தது. ஒரே ஒரு முறைதான் இரண்டாம் இடம். வெற்றியையும், தோல்வியையும் உள்ளச் சமநிலையுடன் ஏற்றுக்கொள்வதை, தங்களது பயிற்சியாளரிடம் அவர்கள் கற்றிருக்கிறார்கள்.அவர்களுக்குத் தெரியும்-சரியான உடல்நிலையுடன், சிறப்பாக ஆட வேண்டும்.அவ்வளவே.

மற்றவற்றை அவர்களது ஆசான் பார்த்துக் கொள்வார்.

